கொண்டு, விவசாய உணவு உற்பத்தி செய்வதற்கு—வேளாண்மைத் துறைமூலம் வேறு ஏதாவது மாற்றுத் திட்டம் கொண்டு வர அரசிடம் கருத்துரு உள்ளதா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், அவர் எழுப்புகின்ற வினாவிற்கும் தொடர்பு இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

24—

தூர் வாருதல்

***3555—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட திருமேனி ஏரியைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட திருமேனி ஏரியைத் தூர் வாரி, கட்டுமானங்களைப் புனரமைக்க ரூபாய் 275 இலட்சத்திற்கு ஒரு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. திட்ட உருவாக்கம் (Planning and Design) Chief Engineer அவர்களுடைய பார்வைக்குச் சென்றிருக்கிறது. அதில் அவர்கள் சில கேள்விகளைக் கேட்டிருக்கிறார்கள். விளக்கத்திற்காக மீண்டும் திருச்சி மண்டலத்தினுடைய தலைமைப் பொறியாளருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. வந்ததற்குப் பிறகு, அதற்கு நிருவாக அனுமதி வாங்கி, பிறகு டெண்டர் விட்டு, அந்த வேலை எடுத்துக்கொள்ளப்படும்.

2008 நவம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திருமேனி ஏரி தூர் வாரப்பட வேண்டும் என்று இதே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் 1996 ஆம் ஆண்டு முதலே இந்தக் கோரிக்கையை வைத்துவருகிறேன். தொடர்ந்து அதுவும் மறுக்கப்படாமல், அது தூர் வாரப்படும் என்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்டு வருகிறீர்கள். ஆனால், தொடர்ந்து நமது பொதுப் பணித் துறை அதிகாரிகள் இதில் பல கேள்விகளை எழுப்பி, திரும்பத் திரும்ப ஆண்டுதோறும் திருப்பி அனுப்பிவிடுகிறார்கள். இதற்கு ஒரு அடிப்படையான காரணம் என்னவென்றால், அந்தத் திருமேனி ஏரியின் பாசனப் பரப்பு குறைவாக இருக்கிறது என்ற ஒரு காரணம் இருக்கிறது. ஏரியினுடைய அளவு அதிகமாக இருக்கிறது. சுமார் 750 ஏக்கருக்கு மேலே இருக்கிறது. எங்களுடைய ஒன்றுபட்ட தஞ்சை மாவட்டத்திலே உள்ள மிகப் பெரிய ஏரி அது. ஆனால், வெளியிலே தெரியாது. பாசனப் பரப்பு குறைவு. ஆனால், அந்த ஏரியின்மூலமாக சுமார் 25 ஊராட்சிகளின் நிலத்தடி நீர் மட்டத்தை உயர்த்துவதற்கான மிகப் பெரிய ஆதாரமாக அது இருக்கிறது. ஆகவே, அதை முதன்மையாக எடுத்துக்கொண்டு பாசனப் பரப்பை மட்டுமே கணக்கில் எடுத்துக்கொள்ளாமல், அந்த ஏரியைப் பாதுகாத்தாலொழிய அந்தப் பகுதியிலே குடிநீர்கூட மிகப் பெரிய பிரச்சினையாக ஆகிவிடும். கால்நடைகளுக்குத் தண்ணீர் இல்லாத பிரச்சினை என்பது ஆண்டுதோறும் தொடர்கிறது. இப்பொழுது தண்ணீர் இல்லை என்று போராட்டம் நடைபெற்று வருகிறது அங்கே. இப்படி பிரச்சினைகள் இருக்கின்ற பகுதி அது. ஆகவே, இந்த விதிமுறைகளைத் தளர்த்தி, அந்த ஏரியைத் தூர் வாரி, கரைகளைப் பலப்படுத்தி, கட்டுமானப் பணிகளையும் இணைத்தே செய்துகொடுப்பதன்மூலமாக சுமார் 35 கிராமங்களினுடைய நீராதாரத்தைப் பெருக்குவதற்கும், பலப்படுத்துவதற்கும் ஆதாரமாக அமையும் என்ற காரணத்தினாலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமது சிறப்புக் கவனத்தின்மூலமாக அந்தப் பணியை நிறைவேற்றித் தருவார்களா எனக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்வது உண்மைதான். காரணம்,

ஒரு திட்டத்தை நிறைவேற்றுகிறபொழுது, அதற்குப் போடுகிற முதலீடு எவ்வளவு, அதிலிருந்து returns எவ்வளவு வருகிறது, அதாவது அதற்கு என்ன சொல்வார்கள் என்றால், Benefit to Economic cost ratio என்பார்கள். இத்தனை per cent வேண்டும் என்றும் சொல்வார்கள். இப்படி ஒரு திட்டம் நீண்ட நாட்களாக அமலில் இருந்தது. தலைவர் கலைஞர் அவர்கள்தான் விவசாயத்திலே போய், வரும்படி எவ்வளவு வருகிறது என்று பார்த்தால் அது ஒத்துவராது; மக்களுக்குப் பயன்படுமா என்றுதான் பார்க்க வேண்டுமே தவிர, Benefit to Economic cost ratio என்ன என்பதைக் கணக்கில் எடுத்துக்கொள்ளக்கூடாது என்று முதல்வர் அவர்கள் அந்த உத்தரவைத் தளர்த்தி இருக்கிறார்கள். அதன் அடிப்படையிலேதான் உங்கள் ஏரிப் பணி எடுத்துக்கொள்ளப்படுகிறது.

முற்பகல் 9-50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

திரு. வை. சிவபுண்ணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய அவையிலே நமது பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய இந்த அறிவிப்பு மேலும் நம்பிக்கையை ஏற்படுத்தி இருக்கிறது. இந்த ஆண்டே திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்து, அதற்குரிய டெண்டர்களை விடுவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

திரு. சி. ஞானசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்போது ஏரிகளைத் தூர் வாரக்கூடிய நெறிமுறைகளைப்பற்றிச் சொல்லி வந்தார்கள். பொதுவாக நிதி நெருக்கடி என்று வருகிறபோது, அரசுக்குப் பணம் இல்லாமல் நபார்டு, உலக வங்கி என்றெல்லாம் நாம் ஆங்காங்கே பணத்தைப் பெற்று ஏரிகளைத் தூர் வார வேண்டிய நிலை இருக்கிறது. விவசாயிகள் அல்லது மற்ற யாராவது அந்த மண்ணை எடுத்துக்கொள்ள முன்வந்தால், அந்த விதிமுறைகளைத் தளர்த்தி எளிதான முறையில் அதைச் செய்தீர்கள் என்று சொன்னால் பாதி ஏரிகளை நம்முடைய தமிழகத்திலே தூர் வார முடியும். (மேசையைத் தட்டும் ஒலி) இப்போது ஒரு லாரி போய் மண் எடுத்தால் 25,000 ரூபாய் அபராதம் போட்டு விடுகிறார்கள், அதற்கு மத்திய அரசினுடைய சட்டம் இருக்கிறது

2008 நவம்பர் 13]

என்றெல்லாம் சொல்லி, லாரியைப் பிடித்து அல்லது fine போட்டு, இப்படியெல்லாம் ஏரிகளைத் தூர் வாருவதற்குக் கடுமையான நெறிமுறைகளை நாம் வைத்திருப்பதைத் தளர்த்தி, விவசாயிகளோ அல்லது கட்டுமானப் பணிக்கு எடுப்பவர்களோ அவரவர்கள் இலவசமாக ஏரி மணலை எடுத்துக்கொள்ளலாம் என்கிற நெறிமுறையை அரசு வகுக்கவேண்டும். நிதி நெருக்கடியால் துன்பப்பட்டுக் கொண்டிருக்கிற அரசு, நான் சொல்கிற இந்த ஆலோசனையை ஏற்று, ஆங்காங்கே இருக்கக்கூடிய ஏரிகளை விவசாயிகள் தூர் வார அனுமதிப்பதற்கு முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. ஞானசேகரன் சொன்னது ஆலோசனை அல்ல; ஆபத்து! (சிரிப்பு) யார் வேண்டுமானாலும் ஏரிகளைத் தூர் வாரிக்கொள்ளலாம் என்று சொன்னால் ஏரிகளே இருக்காது. ஆனால், இப்போதும் ஏரியிலே மண் எடுத்துக்கொள்ள வேண்டும்; வண்டலை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று சொன்னால் அதற்கு ஒருசில விதிமுறைகள் இருக்கின்றன. அதற்கு ஒரு லோடுக்கு 20, 25 ரூபாய் கேட்பார்கள். அது Mines துறையின்கீழ் வருகிறது. கலெக்டரிடம் permission வாங்கினால் எடுத்துக்கொண்டு போகலாம். நாங்கள் –P.W.D.– என்ன செய்யலாம் என்றால், அப்படி permission வாங்கி வந்தால் forefront-ல் எடுப்பதா அல்லது உள்ளே எடுப்பதா, எங்கே எடுக்க வேண்டும் என்று இடத்தை நாங்கள் choose செய்து சொல்வோம், அவ்வளவுதான். ஆகையினால், ஏரியிலே மண் எடுப்பது அறவே நிறுத்தப்பட்டிருக்கிறது என்பது அல்ல. யார் யார் அப்படி ஒரு அனுமதி பெற்று வருகிறார்களோ அவர்கள் மண் எடுத்துக்கொள்ளலாம். திரு. ஞானசேகரனுக்கு அப்படி ஏதாவது இருந்தால், என்னிடம் சொன்னால் அடுத்த நாள் எடுத்துத் தருகிறேன். (சிரிப்பு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

திரு. தி. வேல்முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஏரிகளைத் தூர் வாரி, கரைகளைப் பலப்படுத்துகின்ற நேரத்தில், கடலூர் மாவட்டத்தில் வெள்ளாறு, மணிமுத்தாறு ஆகிய இரண்டு ஆறுகளும் இணைகின்ற இடத்திலிருந்து கடலில் கலக்கின்ற வரையில்

சுமார் 40 கிலோ மீட்டருக்கு மேலாக இரண்டு பக்கங்களும் கரைகளே இல்லாமல் அந்தப் பகுதியில் வெள்ளக் காட்டாமணக்கு, நெய்வேலி காட்டாமணக்குகள் முளைத்து அந்த நீர் வடிவதற்கு வாய்ப்பே இல்லாமல் போய் 15 கிராமங்கள் முற்றிலுமாக முழுவதும் அழிக்கப்பட்ட நிலையில், மேலும் 150-க்கும் மேற்பட்ட கிராமங்கள் முழுவதும் எதிர்வரும் மழைக் காலங்களில் அழிவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு நேற்றையதினம் இதைக் கொண்டு வந்தேன். அதற்கு பிரத்தியேக, சிறப்புத் திட்டக் கூறுகளை உருவாக்கி, மழைக் காலத்திற்கு முன்பாகவே அந்த இரு பக்கக் கரைகளைப் பலப்படுத்தி, வெள்ளாற்றினுடைய வாய்க்கால் நீர் கடலில் கலப்பதற்கு ஏதுவாக, பாதுகாப்பு அரண்களை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெள்ளாற்றுக் கால்வாய்களைப் பலப்படுத்துவதற்கு அரசிடத்திலே திட்டம் இருக்கிறது. அதற்கான நிதியும் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேற்றையதினம் இதுகுறித்து அறிவிப்புத்தந்திருக்கிறார்கள். வேண்டுமானால், நாளைக்கு அதன் முழு விவரத்தையும் call attention மூலமாக உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி.

திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டை தொகுதியில், நிலக்கோட்டையின் மையப் பகுதியில் உள்ள கொங்கர்குளம் கண்மாயைத் தூர் வாருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அந்த ஏரி அவசியம் தூர் வாரப்படவேண்டும் என்று சொன்னால், அதன் பெயரை நீங்கள் இன்னொரு தரம் சொன்னாலும் பரவாயில்லை; இல்லையென்றால் எழுதிக் கொடுத்தாலும், உடனடியாக அதை எடுப்பதற்கு ஆவன செய்யப்படும்.

2008 நவம்பர் 13]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையிலே, நீர் ஆதாரங்கள் பற்றாக்குறையாக, நாளுக்கு நாள் குறைந்து வருகிற மாநிலமாக இருந்து கொண்டிருக்கிறது. இந்தச் சூழ்நிலையில், ஆயிரக்கணக்கான ஏரிகள் இருந்தும்கூட, ஏரிகள் எல்லாம் தூர் வாரப்படாமல், ஆழம் இல்லாமல், வருகிற மழை நீர் அப்படியே வெளியேறுகிற நிலை இருந்து கொண்டிருக்கிறது. இதையெல்லாம் கருத்தில்கொண்டு, தமிழ்நாட்டில் உள்ள ஏரிகளில் எத்தனை ஏரிகளைத் தூர் வாருவதற்கு அரசு முயற்சி எடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன். அதோடுமட்டுமல்லாமல், ஏரி நிறைய மண் நிறைந்து இருக்கிறது. இதை விவசாயிகள் தங்களுடைய விளைநிலங்களுக்கு உரத்திற்காக எடுத்துச் செல்கின்ற நேரத்தில், சாதாரணமாக மண்ணை எடுத்துக்கொண்டுப் போனாலும் சரி, டிராக்டரில் எடுத்துக்கொண்டு போனாலும் சரி, 25,000 ரூபாய் தண்டம் விதிக்கிறார்கள். சரி, அனுமதியாவது கொடுங்கள் என்று சொன்னால், இந்த ஏரியில் மண் எடுப்பதற்கு அரசு அனுமதிக்கவில்லை என்று சொல்லி, பல ஏரிகளிலே புறந்தள்ளிவிடுகின்றார்கள். அதனால் விவசாயிகளால் மண் எடுக்க முடியவில்லை; ஏரிகளும் மண் மூடி அப்படியே இருக்கின்றன. ஆகவே, எல்லா கிராமங்களிலும் விவசாயிகள் குறைந்த கட்டணத்தில் மண் எடுப்பதற்கு அனுமதியைக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 9-55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் மொத்தம் எவ்வளவு ஏரிகள் இருக்கின்றன என்று கேட்டு, அந்த ஏரிகளைத் தூர் வாரவேண்டுமென்று சொன்னார். ஏரிகளை எடுத்துக்கொண்டால் தமிழ்நாட்டில் கிட்டத்தட்ட 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏரிகள் உள்ளன. எல்லா ஏரிகளும் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமானவையல்ல. 10 ஆயிரம் ஏரிகள்தான் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமானவை. அவற்றில் இப்பொழுது 5 ஆயிரம் ஏரிகளைத் தூர் வாருவதற்கு World Bank-ல் பணம் வாங்கி வேலை செய்துகொண்டிருக்கின்றோம். அது முதற்கட்டம்.

இரண்டாவது, அவர் மண் எடுப்பதைப்பற்றிச் சொன்னார். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் கேட்டதற்குக்கூட சொன்னேன். ஏரிகளில் மண் எடுப்பதில் இரண்டு வகைகள் உள்ளன. வண்டலைக் கொண்டு வந்து சில பேர் வயலில் போடுவார்கள். அது ஒரு நல்ல எரு; நல்ல எரு போடுவார்கள். ஆனால், பல பேர் ஏரிகளில் மண் எடுப்பதற்கு எதற்கு அனுமதி கேட்கின்றார்கள் என்றால், National Highways-ல் இப்போது ரோடு போடுகின்றார்கள்; அந்த ரோட்டை மேம்படுத்துவதற்கு, அங்கே dump பண்ணுவதற்கு, அதற்குத்தான் மண் வாருகின்றார்களே தவிர, வேறல்ல. மற்றபடி நிலத்திற்குப் போடுவதற்கு விவசாயிகள் பாவம், அவர்கள் கொஞ்சம்தான் எடுக்கின்றார்கள். ஒரு வண்டி மண் இருந்தால் அவர்களுக்குப் போதும். ஆனால், இவர்கள் அப்படி இல்லை. ஒரு டிரக்கில் வைத்து கொண்டுபோய் தள்ளி, ரோடு போடுவதற்குத்தான் அதிகம் பேர் மண் எடுக்கின்றார்கள். அதற்கு அனுமதி கொடுக்கின்றபோது சில நேரங்களில் என்ன ஆகின்றது என்றால், நான்கூட ஏரியைப் பார்த்தேன், ஏரியில் மண் எடுக்கும்போது forefront—ஆரம்பத்திலேயே எடுத்துவிடுகின்றார்கள். ஏரியில் தண்ணீர் வரும்போது மதகுக்குப் போகாது. இவர்கள் மண் எடுத்த இடத்தில், அங்கே ஆழத்திலேயே அப்படியே நின்றுவிடும். ஆகவே கொஞ்சம் restrict செய்து கொடுக்கவேண்டும் என்பதே தவிர, கொடுக்கக்கூடாது என்பதல்ல. தூர் வாருவதைப் பொறுத்தவரையில், துறையில்கூட தூர் வாரும்போது மண்தான் எடுக்கின்றோம். விவசாயிகளும் எடுக்கலாம். ஆனால், அதை ஒழுங்குபடுத்த வேண்டுமென்பதற்குத்தான் சில விதிமுறைகளை வைத்திருக்கின்றோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அப்பாவு.

திரு. மு. அப்பாவு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள ஏரிகள், குளங்களிலெல்லாம் கடந்த ஓராண்டுக் காலமாக நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களால், மத்திய அரசின் வேலை உறுதியளிப்புத் திட்டத்தின்மூலம் ஆங்காங்கே தூர் வாரப்பட்டு வருகின்றன. இருந்தாலும்கூட, முழுமையாகத் தூர் வாரப்படவில்லை. ஆகவே, அதற்கு ஒரு ஆலோசனையாக நான் சொல்ல விரும்புவது, ஒரு மாவட்டத்திற்கு 10 அல்லது ஒரு தாலுகாவுக்கு ஒரு J.C.B. இயந்திரம் என்ற வீதம் நமது பொதுப் பணித் துறையின்மூலம் வாங்கிக் கொடுத்து, அதற்குச் சரியான ஓட்டுநரையும் நியமித்து, விவசாயிகள் அத்தியாவசியமாக எந்த குளங்களைத் தூர் வாரவேண்டும்; அல்லது கரையைப் பலப்படுத்த

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

2008 நவம்பர் 13]

வேண்டும் என்று விரும்புகின்றார்களோ, அதற்குரிய டீசலை மட்டும் அவர்களைக் கொடுக்கச் சொல்லி, அந்த அளவில் குளங்களைத் தூர் வாரவோ அல்லது கரைகளைப் பலப்படுத்தவோ வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தால், அது விவசாயிகளுக்கும் பலன் தரும் என்பது சாதாரண கிராம மக்களுடைய எண்ணமாக இருக்கின்றது. ஆகவே, சிறப்பாகப் பணியாற்றி வருகின்ற நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் இதைக் கவனத்தில் வைத்து அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்வார்களா என்று தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அப்பாவு அவர்களின் நீண்ட அரிய, பெரிய யோசனையை அரசு ஆலோசிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கூ.ந. சேகரன்.

திரு. கூ.ந. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெறும்பூர் அருகில் இருக்கின்ற கூத்தப்பார் பெரியகுளம் ஏரி, மிகப் பெரிய ஏரி. திருவெறும்பூர், வேங்கூர், நடராசபுரம், கூத்தப்பார், அரசங்குடி போன்ற அத்துணைப் பஞ்சாயத்துகளிலும் இருக்கின்ற விவசாய நிலங்களுக்கு எல்லாம் இந்த ஏரியிலிருந்துதான் பாசனத்திற்கு நீர் எடுத்துச் செல்லப்படுகின்றது. இந்த ஏரி நீண்டகாலமாகத் தூர் வாரப்படாத காரணத்தால், அதில் காட்டாமணக்குச் செடிகள், கருவேல மரங்கள் எல்லாம் முளைத்து, மிகப் பெரிய ஏரி என்கின்ற நிலையில்லாமல், காடு போன்று காட்சியளித்துக் கொண்டிருக்கின்றது. நமது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கல்லணையில் நடைபெறுகின்ற பணியை ஆய்வு செய்ய வந்தபோது, அந்த ஏரியின் நிலையை அவரிடத்திலே நேரிலே காண்பித்து, தூர் வார வேண்டுமென்ற கோரிக்கையும் வைத்திருக்கின்றேன். எனவே, அந்த ஏரியின் நிலையைக் கருதி, விவ்சாயப் பெருமக்களின் நீண்டகாலக் கோரிக்கையை நிறைவேற்றுமுகமாக, கூத்தப்பார் பெரியகுளம் ஏரியை, இந்த ஆண்டே தூர் வார நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன ஏரியை நானும் பார்த்தேன். இங்குள்ள உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் எங்கள் ஊர் ஏரி பெரிய ஏரி என்று சொன்னார்கள். உள்ளபடியே அது பெரிய ஏரிதான். அந்த ஏரியைத் தூர் வாரவேண்டுமென்று அன்றைக்கு அதிகாரிகளிடத்திலே சொல்லிவிட்டு வந்தேன். அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கின்றார்கள்.

முற்பகல் 10-00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி.

திரு. ஆர். சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏரிகளைத் தூர் வாருவதற்கு அரசு நிதி தருவதில் சிரமம் இருப்பதால் பல ஏரிகள் தூர் வாராமல் இருந்துகொண்டிருக்கின்றன. அப்படிப்பட்ட நிலையில், விவசாயிகள் உரத்திற்காக அந்தக் கரம்பை அள்ளுகின்றபோதுகூட, அரசு அதிகாரிகள் அள்ள விடுவது கிடையாது. ஆனால் அமைச்சர் சொன்னதுபோல், ரோடு போடுகின்றவர்கள், என்னுடைய மேலூர் தொகுதியில், four way road போடுவதற்காக permission வாங்கி, கண்மாய்களில் 20 அடி 25 அடி ஆழம் குழிதோண்டி. அதிலே நிறைய பேர் விழுந்து உயிர் இழக்கக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. சமீபத்தில்கூட ஒரு மாதத்திற்கு முன்பாக, கருங்காலக்குடி என்ற கிராமத்திலே அவ்வாறு தண்ணீரில் விழுந்த குழந்தையும் அதனைக் காப்பாற்றச் சென்ற தகப்பனும் அதன் உள்ளே விழுந்து இறந்துவிட்டார்கள். பொதுப் பணித் துறை அதிகாரிகள், 4 வழிப் பாதை ரோடு போடுவதற்காக இராட்சத இயந்திரங்களை, வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்து 20 அடி 25 அடி ஆழமாக மண் அள்ளுவதால் நூற்றுக்கும் மேற்பட்ட கண்மாய்களிலே விவசாயிகள் அவ்வாறு மிகவும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். அவ்வாறு இறந்தவர்கள் குடும்பத்திற்கு அரசு நிதியுதவி செய்வது குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லாமல் இருக்கிறது.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்கவும். அவர் என்ன சொன்னார் என்று

2008 நவம்பர் 13]

புரியவில்லை. எப்படியிருந்தாலும் நல்லது சொல்லியிருக்கின்றார்கள் என்று நினைக்கிறேன். அதை மறுபடியும் நான் அவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்கிறேன். ஆனால், இறந்துவிட்டார்கள் என்று சொன்னார்கள். அதுகுறித்து எனக்கு விவரம் தெரியவில்லை. விவரம் அறிந்து சொல்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் *25*, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

25—

கட்டடம்

***54559—திரு. கே.பி. இராமசுவாமி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராசிபுரம் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ராசிபுரம் போக்குவரத்துப் பகுதி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் ராசிபுரம் பகுதி அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி.

திரு. கே.பி. இராமசுவாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதி ராசிபுரத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம், தற்போது தேசிய நெடுஞ்சாலையருகே இயங்கிக்கொண்டிருக்கிறது. தற்போது அந்த நெடுஞ்சாலை விரிவாக்கப் பணி காரணமாக, அந்தக் கட்டடம் எல்லாம் இடிக்கப்பட்டு, வாடகைக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. தினந்தோறும் தகுதிச் சான்று பெறுவதற்கு 200 வாகனங்களும், புதியதாகப் பதிவு செய்வதற்கு 300-க்கும் மேற்பட்ட வாகனங்களும், காலாண்டு வரி செலுத்துவதற்காக கிட்டத்தட்ட 2,100